சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :16.12.2024
வா.சா.1 - செய்யது இப்ராகிம்
O.S No.359/2021 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

பி.சா.ஆ.5 ஆவணமானது பாகபிரிவினைக்கான நினைவூட்டல் ஆவணம் என கண்டுள்ளது அந்த ஆவணத்தில் உள்ள விபரங்கள் எனக்கோ, என்னுடைய தாயாரான 6ம் பிரதிவாதி மரியம்பீவிக்கோ நேரடியாக தெரியாது என்றால் நான் பார்க்கவில்லை, எனக்கு அப்போது இளம்வயது என் தாயார் பார்த்தாரா என்பது எனக்கு தெரியாது. மேற்படி பி.சா.ஆ.5 ஆவணத்தை நேரடியாக எழுதும் போது என் தாயார் பார்த்தாக அவர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் என் தாயார், கையெழுத்து தரப்பினர்கள் போடும் போது நேரடியாக பார்த்ததாக அவருடைய எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இதற்கு முன்னர் பி.சா.ஆ.5 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தானது எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டதாக எழுதப்படவில்லை என்றால் நான்கு பங்கு சொத்துக்களாக பிரித்து அதில் ஒரு பங்கு எனது தகப்பனாருக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.5 ஆவணத்தில் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று அந்த ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் 2வது பக்கத்தில் நான்கு நபர்களும் அனுபவித்து வருகிறதாக குறிப்பிடப்பட்டுள்ளது அதில் என் அப்பாவும் உள்ளடங்கும் என்று சாட்சி குறிப்பிடுகிறார். பி.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் எனது தந்தையான காதர்மைதீனுக்கு எந்த சொத்தும் தனித்துஉரிமைபாத்தியம் கொண்ட சொத்துக்களாக குறிப்பிட்டு

சொல்லப்படவில்லை என்றால் இல்லை. ஆனால் என் தந்தைக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் சொல்லப்பட்டிருந்தது வாசகம் தான் இடம்பெறவில்லை என்று சாட்சி தாமாக முன்வந்து குறிப்பிடுகிறார். பி.சா.ஆ.5 ஆவணத்தில் என் தந்தைக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று எந்த சொத்துக்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் எல்லாம் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் தாய்வழி பாட்டி மற்றும் தாய்வழி பாட்டனார்எழுதிவைத்த வசயத் என்று சொல்லப்படும் உயில் மூலமாக கிடைக்கப்பட்ட சொத்துக்கள் தான் என்றால் அதுவும் உள்ளங்கும், உயில் மூலமாக அல்லாமல் மற்ற என் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களும் உள்ளடங்கும். என்னுடைய எதிர்வழக்குரையில் மேற்படி பி.சா.ஆ.5 ஆவணத்தில் என் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களும் உள்ளடங்கியுள்ளது என்பது பற்றி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, சொல்லியிருக்கிறோம். என்னுடைய எதிர்வழக்குரையின் 7வது பத்தியில் மேற்படி பிரிவினையில் காதர்மைதீனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களும் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறோம். என் தந்தை காதர்மைதீனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிட்டு சொல்லியிருப்பது வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு தாய்வழி பாட்டி மற்றும் பாட்டனார் மூலமாக கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் தான் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.5 ஆவணத்தில் என் தந்தைக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தாக சொத்துக்கள் இருந்திருப்பின் அதற்குரிய ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையில் அவை என் தந்தையுடைய தனித்த சொத்துக்கள் ஆகாது என்றால் சரியல்ல. ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் இருந்திருக்கலாம் ஆனால் என் தந்தைக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் இருந்தது. பி.சா.ஆ.5

ஆவணத்தில் என் தந்தைக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் எதுவும் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல, காட்டியிருக்கிறோம். பி.சா.ஆ.5 ஆவணத்தில் என் தந்தைக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் எவை என்றால் பி.சா.ஆ.5 ஆவணத்தில் B அட்டவணை சொத்தில் கமாலுக்கு ஒதுக்கப்பட்ட கடை என் அப்பாவிற்கு தனித்து ஒதுக்கப்பட்ட சொத்தாகும். 2ம் பிரதிவாதி நூர்ஜஹானுக்கு ஒதுக்கப்பட்டC அட்டவணை சொத்து என் அப்பாவிற்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தாகும். மற்ற சொத்துக்கள் பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. B, C அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் என் தந்தை காதர்மைதீனுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.278/1995(பி.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில்) வழக்கு சொத்து அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.278/1995 வழக்கில் என்ன பரிகாரத்திற்காக யார், யார்மீது தாக்கல் செய்யப்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியாது ஆனால் நான் பின்னிட்டு தெரிந்து கொண்டேன். 1ம் பிரதிவாதி கமால் என் அப்பா காதர்மைதீன் மீதும், நூர்ஜஹான், வாதி ராஜாமுகமது மீது சொத்துகக்கள் சரியாக பிரிக்கப்படவில்லை என்று கூறி வழக்குதாக்கல் செய்தார். மேற்படி வழக்கை கமால் போடவில்லை என்றும், வாதி, என் தந்தை காதர்மைதீன் மற்றும் நூர்ஜஹான் ஆகியோர் தாக்கல் செய்த வழக்காகும் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். மேற்படி வழக்கானது சொத்துரிமையை விளம்புகை செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அல்ல என்றால் அதுபற்றி தெரியவில்லை. மேற்படி வழக்கானது என் தகப்பனாரால் உற்பத்தி செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. உண்மையாலும், என் தந்தைக்கும், வாதிக்கும்,

கமாலுக்கும், நூர்ஜஹானுக்கும் இடையே பிரச்சினை இருந்திருந்தால் அவர்கள் உரிமை விளம்புகை பரிகாரத்திற்காக வழக்கை தாக்கல் செய்திருப்பார்கள் என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்திருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி அ.வ.எண்.278/1995ல் பி.சா.ஆ.5 ஆவணத்தை ஊர்ஜிதம் செய்யவேண்டும் என்று வர்மித்து பொய்யாக ஒரு வழக்கை உற்பத்தி செய்ய வேண்டும் என்று எண்ணி தான் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கை பற்றிய விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியவாய்ப்பில்லை என்றும்,அப்போது நான் இளவர் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதி கமால் என்பவர் வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்று மேற்குறிப்பு மூலமாக நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டார் என்றால் சரிதான். உண்மையாலும் அ.வ.எண்.278/1995 வழக்கில் தாவா இருந்திருக்குமேயானால் வழக்குப்படி தீர்ப்பாகவேண்டும் என்று கமால் சொல்லியிருக்கமாட்டார் என்றால் சரியல்ல. உண்மையாலும் 1995ல் பாகபிரிவினை சொத்து பிரித்த பிறகு தொடர்பாக ஒரு பிரச்சினை இருந்தது. அதன்பிறகு அவரவர் சொத்துக்களை பிரித்து கொண்டு அனுபவித்து கொள்ளவேண்டியது என்பதற்காக தான் அ.வ.எண்.278/1995வழக்கை தாக்கல் செய்தார்கள். பாகபிரிவினையை கமால் ஏற்றுக்கொண்டதால் தான் மேற்படி வழக்கில் அவர் எதிர்கட்சியாடவில்லை. மேற்படி விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழக்கு தொடர்பான விபரங்களை அந்த வழக்கின் தரப்பினர்களை விசாரித்தால் மட்டுமே தெரியவரும் என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் தரப்பினர்களை விசாரித்தால் மட்டுமே அந்த ஆவணத்தின் மெய்தன்மை குறித்து தெரியவரும் என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தை யார் தயாரித்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பி.சா.ஆ.5

ஆவணம் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியாது. பி.சா.ஆ.5 ஆவணம் எந்த தேதியில் ஊர்ஜிதத்திற்கு வந்தது என்பதை தேதி குறிப்பிட்டு என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.6 ஆவணம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பி.சா.ஆ.6 ஆவணமான பதில் அறிவிப்பின் 7வது பத்தியில் 30.05.1992 தேதியில் ஏற்பட்ட பஞ்சாயத்து தீர்மானபடிக்கும், பின்னால் குடும்ப ஏற்பாட்டின் கீழ் 03.06.1992 தேதியில் வாதி, கமால் மற்றும் நூர்ஜஹான் ஆகியோர் காதர் மைதீனுடன் எழுதிக்கொண்ட வா.சா.ஆ.5 ஞாபககுறிப்பில் காதர்மைதீனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் பாகத்திற்கு பின்பு எதிர்காலத்தில் தனிப்பட்டு வாங்கப்படும் சொத்துக்களிலும், வாதி, 1, 2 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும், பாத்தியமும் இல்லை என கண்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.6 பதில் அறிவிப்பில் குடும்ப ஏற்பாடு 03.06.1992 தேதியில் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் 03.06.1995 அன்று ஏற்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். உண்மையாக பத்திரத்தில் உள்ள வருடம் சரிதான். பதில் அறிவிப்பில் உள்ள தேதி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் பதில் அறிவிப்பில் தேதி தவறாக குறிப்பிடப்பட்டிருந்தால் ரிஜாயிண்டர் அறிவிப்பானது அனுப்பப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. ரிஜாயிண்டர் அறிவிப்பு அனுப்பியதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.6 ஆவணத்தில் குடும்ப ஏற்பாடு நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணமானது பாகவிஸ்தி ஏற்பட்டதாக சொல்லப்பட்ட ஆவணம் என்றால் பதில் அறிவிப்பு பி.சா.ஆ.6ல் குடும்ப ஏற்பாடு மற்றும் பாகபிரிவினை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.5 ஆவணமானது குடும்ப ஏற்பாட்டு ஆவணமா அல்லது பாகவிஸ்தி ஆவணமா என்றால் பாகவிஸ்தி ஞாபககுறிப்பு

ஆவணமாகும். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 8வது பத்தியில் என்னுடைய தகப்பனார் அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே கிபா(கொடை) கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலோ, அல்லது நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்திலோ, எந்த வருடம், எந்த தேதியில் எனது தகப்பனார், எனக்கு தாவா சொத்தை கிபா(கொடை) எழுதி வைத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தினுடைய வருவாய் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். வழக்கு சொத்து எங்களுடைய அனுபவத்தில் இருக்கிறது என்பதை நிருபிக்கும் ஆவணங்களை நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியான கமால் வாதியின் வழக்கை ஏற்றுக்கொண்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சாட்சியிடம் 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை காட்டப்பட்டு அதில் வாதியின் கட்சியை அனுசரித்து ஏற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்கப்பட்டது. சாட்சி எதிர்வழக்குரையை படித்து பார்த்து கமால் வாதியினுடைய வழக்கை அனுசரித்து தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்ததாக குறிப்பிடுகிறார். பி.சா.ஆ.8 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து பூர்விக பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பூர்விக பாகபாத்தியமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பி.சா.ஆ.8 ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட சொத்தானது, 03.06.1995ல் ஏற்பட்ட பாகவிஸ்தி ஞாபக குறிப்பின் பேரில் ஏற்பட்டு கிடைத்ததாக பி.சா.ஆ.8 ஆவணத்தில் வாதியால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதுபோல் பி.சா.ஆ.7 ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது வாதிக்கு 03.06.1995ல் ஏற்பட்ட பாகவிஸ்தி ஞாபக குறிப்பின் பேரில் ஏற்பட்டு கிடைத்ததாக குறிப்பிட்டு

சொல்லப்படவில்லை என்றால் தேதி குறிப்பிடப்படவில்லை, ஆனால் பூர்விக பாகபாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 03.06.1995ம் தேதியில் பாகவிஸ்தி ஏற்பட்டு வாதி பாகம் அடைந்திருப்பாரேயானால் மேற்படி பி.சா.ஆ.7, 8 ஆவணங்களில் 03.06.1995ல் ஏற்பட்ட பாகவிஸ்தி ஞாபககுறிப்பு நடைமுறைக்கு வந்திருந்தால் அதை பற்றி பி.சா.ஆ.7, 8 ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லியிருப்பார் என்றால் பொதுவாக பாகபாத்தியம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது, தேதி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. 1992ம் ஆண்டு மேலூர் ஜமாத்தார் முன்னிலையில் எனது தகப்பனார், வாதி, 1, 2 பிரதிவாதிகள் ஆகியோரிடையே குடும்ப ஏற்பாடு ஏற்பட்டது குறித்த எந்த ஒரு ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக குடும்ப ஏற்பாடு என்பது குடும்பத்தில் இருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இசைவு தெரிவிக்கப்பட்டு ஏற்படக்கூடிய ஒன்று என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் எனது தாயார் மரியம்பீவி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் என் தகப்பனார் ஏற்படுத்தியதாக சொல்லப்பட்ட ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் குறித்து வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு முழுமையாக தெரிவிக்கப்பட்டது குறித்த எந்த ஒரு சங்கதியும் 6ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் காணப்படவில்லை என்றால் அதற்கான அவசியம் ஏற்படவில்லை என்பதால் சொல்லவில்லை. பி.சா.ஆ.5 ஆவணமானது எனது தகப்பபனாரால் தன்னிச்சையாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றும், அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் யாவும், ஷரியத் சட்டத்திற்கு எதிரானது என்றால் சரியல்ல. ஷரியத் சட்டத்தில் எதிர்கால உரிமையை விடுவிக்கக்கூடிய சங்கதி சட்ட முரணானது என்று சொல்லப்பட்டுள்ள விஷயம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

பி.சா.ஆ.5 ஆவணமானது உற்பத்தி செய்யப்பட்ட ஒரு மோசடியான ஆவணம் என்றும் அதனடிப்படையில் நாங்கள் எதிர்கட்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. எதிர்கட்சியாடுவதற்கு சட்டப்படி எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், வாதி வழக்குபடி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2024.12.16 20:30:06 +0530

Sub Judge
Melur